

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 2.

பிங்களஸ்ல ஜேஷ்ட சுத்தபஞ்சமி.

ஈசுவரபூஜாவிதானம்

நைமிசாரண்ய வாஸிகளாகிய மகரிஷி ஜனங்கள் ஸூதபுராணிகரை மிகவும் பக்தியுடன் நீலகண்டராயும் சூலத்தை யுடையவருமான, ஸ்ரீ பரமேசுவரனுடைய புக்தியையும், முக்தியையும் கொடுக்கக் கூடிய சிறந்ததான பூஜாவிதியை கிருபைகூர்ந்து எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்குங்கால், ஸூதர் கூறுகின்றார்.

ஹே பிராமணர்களே உங்கள் அபிப்பிராயப்படி சொல்வதாயிருந்தால் மிகவும் சிரத்தையுடன் கேட்க வேண்

டுமென்று சொல்லிப் பிறகு ஆரம்பித்தார்.

முதலில் சிரத்தையுடன் சுருதி ஸ்மிருதிகளிற் கூறிய நித்ய கர்மங்களைச் செய்து ஸ்நாநம் (விபூதிஸ்நாநம்) செய்து சுத்தமாயும் சமமாயும் கோமயத்தால் சுத்தி செய்யப்பட்டதுமான இடத்தில் மனத்தில் வேறுவிதமான ஒரு விசாரமும் இல்லாமல் மௌனமாக வடக்குநோக்கி உட்கார்ந்து கொண்டு ஹே பிர்மவித்துக்காள், விசித்திரமான ஆஸனத்தில் ஆகஸ்திய சாஸ்திரத்தாற் கூறப்பட்ட சிவலிங்கத்தை வைத்து சாந்த மனஸுடனும் மிகவும் சிரத்தையுடனும் இருதயத்தில் இருக்கிற ஈசனை ப்ரணவமந்திரத்தால் அந்தலிங்கத்தில் ஆவாகனம் செய்து பிறகு ஓங்காரமந்திரத்தாலும் பஞ்சாக்ஷர மந்திரத்தாலும் ஆர்க்யம் ஆசமனம் கொடுத்து புருஷஸூக்தம் ஸ்ரீருத்திரம் பஞ்சாக்ஷரம் முதலான மந்திரங்களால் மகாதேவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து மறுபடியும் ஆசமனம் கொடுத்து ஆஸனத்தில் எடுத்துவைத்துப் பிரணவ மந்திரத்தால் சிரத்தையுடன் வஸ்திரம் சாற்றிப் பிறகு யஞ்யோபவீதம் ஆபரணங்கள் விபூதி ருத்ராக்ஷம் இவைகளையும் சாற்றிக் கந்தம் புஷ்பம் தூபம் தீபம் கொடுத்துப் பின்பு பிரணவத்துடன் கூடிய பஞ்சாக்ஷர மந்திரத்தால் ஜலத்துடன் நைவேத்தியம்வைத்துப் பிறகு ஆசமனம் கொடுத்து லவங்கம் முதலிய வாஸனாதித் திரவ்யங்களுடன் தாம்பூலம் சமர்ப்பித்துப் பிறகு புஷ்பஹாரம் சந்தனப் பூச்சு முதலிய உபசாரங்களை கொடுத்து பூமியில் தண்டம்போல் நமஸ்கரித்து வைதிகமான ஸ்தோத்திரங்களாலும் லௌகிகமான ஸ்தோத்திரங்களாலும் நன்குபோற்றி ஸர்வக்ஞராயும் ஸர்வஜகத் காரணமாயும் ஸர்வேச்வரனையும் விளங்கும் ஸ்ரீ மகாதேவலிங்கத்தை இருதயத்தில் விஸர்ஜநம் செய்யவேண்டும்.

லிங்கத்தில் ஸ்திர லிங்கமென்றும் சர லிங்கமென்றும் இரண்டு விதம் உண்டு. அதில் சரலிங்கத்தில் மிருத்திகை, ஸ்படிகம், கோமயம், பாணம், இரத்தினம், ரஸம், தாரு இவைகளாற் செய்யப்பட்ட பல விதபேதங்கள் உண்டு. பூஜைக்கு இவைகளுக்குள் ரஸலிங்கம் மிகவும் உத்தமமானது. சாதாரணச் சிலைகளைக்காட்டிலும் நான்கு ஐந்து மடங்கு அதிக நிறையுள்ளதாயிருப்பது பாண லிங்கத்தின் இலக்கணமாகும். பிர்ம்மசாரி கிரஹஸ்தன் வானப்ரஸ்தன் என்ற இம் மூவர்களும் உமாபதியான சிவலிங்கத்தை நாள்தோறும் பூஜிக்கவேண்டும். விரதாநுஷ்டானம் செய்பவர்கள், ஆறு காலமும், இருவேளை போஜனம் செய்பவர்கள் இரண்டு காலமும், ஒரு வேளை ஆகாரம் செய்கிறவர்கள் ஒரு காலமும், பூஜிக்கவேண்டும். ஸந்நியாஸிகளாயிருந்தால் ப்ரணவத்தாலேயே அந்த ஈசனை பக்தியுடன் பூஜிக்கவேண்டும். ஸ்திரீகளாகில் நம என்கிற சப்தத்தை முடிவில் கொண்ட பஞ்சாக்ஷர மந்திரத்தால் பூஜை செய்து வரவேண்டுமென்றும் விதி ஏற்பட்டிருக்கிறது. விரக்தர்களாயுள்ள சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கு கூறியவாறே பூஜை செய்ய விதி ஏற்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்டவர்களைத் தவிர வேறான ஸங்கரஜாதி முதலானவர்களுக்கு ஈச்வர ஆலயத்தைப் பார்த்துப் பக்தி சிரத்தையுடன் வந்தனம் செய்வதே அவர்களுக்குச் சிறந்த பூஜையாகும். இவ்விதம் எவர்களால் மிகுந்த பக்தியுடன் பூஜிக்கப்படுகிறதோ எச்சாதியாயிருப்பினும் அவர்களுடைய ஜன்மமே சபலமாகும் என்பதற்கு ஐயமில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக அடியில் வருமாறு ஓர் சிறு கதை இங்கு நிரூபிக்கப்படுகிறது.

முற்காலத்தில் மானிடர்களுக்குள் மிகவும் கெட்ட

வனும் எவ்விதமான பாபகர்மாக்களையும் அற்பமேனும் அச்சமின்றி புண்யகர்மாவைப்போல் சந்தோஷத்துடன் செய்யத் துணிந்த, ஓர் புலையன் இருந்தான். அவன் ஒவ்வொரு தினமும் பசு ஹிம்சை, பிராம்ஹண ஹிம்சை மற்றுமுள்ள எவ்விதப் பிராணிகளையும் வதம் செய்வது முதலிய கர்மாக்களையும் மார்க்கத்திற் செல்லும் ஜனங்களையும் இரக்கமின்றி ஹிம்ஸித்து வழிப்பறிசெய்து தன் இஷ்டப்படி ஸஞ்சரித்து வந்தான். இவ்விதம் கடூரச் செய்கையுள்ளவிப்பாபிக்கு, வேச்யாபதியான ஓர் அந்தணனுடைய ஸ்நேகமும் கிடைத்தது. இவ்விருவர்களுக்கும் கிரமமாய் ஸ்நேகம் விருத்தி அடையுங் காலத்தில் இப் பிராமணனுக்கு அப்புலயன் திரவியதானத்தால் உதவிசெய்து வந்தான். அதினால் மிகவும் சந்தோஷமடைந்த அந்த வேதியன் இவனுக்கு நல்ல புத்தி உண்டாக்க வேண்டி அடியில் வருமாறு உபதேசிக்க ஆரம்பித்தான். ஹே நண்பனே, நம்மிருவருக்கும் ஸிநேகம் ஏற்பட்டு மெம்மேலும் விருத்தி அடைந்து அதினால் எனது க்ஷேமத்தையே நீ பெரிதாய்க்கருதி, ஜனங்களுக்கு மிகவும் பிரியமான தனத்தைக் கூட என் விஷயத்தில் நீ அற்பமாக நினைத்து அதினால் எனக்கு மிகவும் உபகாரம் செய்கிறபடியால் உன்னுடைய க்ஷேமத்தையும் அவசியம் கவனிக்கவேண்டியது என்னுடைய கடமையாயிருக்கிறது. ஆகையால் என்னுடையவார்த்தைகளை ஆதரவுடன் நீ அவசியம் கவனிக்க வேண்டுமென்று அவனுக்கு உபதேசித்து நீ செய்வன யாவும் சாஸ்திரங்களாலும் உலகத்தினாலும் மிகவும் கெட்ட காரியமென்று நிந்திக்கத்தக்கதே. பாபங்களுக்குள் எவற்றைக் கனவிலும் கருதக்கூடாதென்று புன்முறை கடவுளுடைய ஆக்ஞாரூபங்களான சுருதிஸ்மிருதி புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றனவோ அவ்வித

மான கோஹத்தி, பிர்ம்மஹத்தி முதலிய கர்மாக்களை பல தடவை நீ செய்திருக்கிறாய். இவ்விதம் புத்தி இல்லாதவனான உன்னால் செய்யப்பட்ட கெட்ட கர்மாக்கள் யாவும் உனக்கு அநிஷ்ட பலத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கின்றன. எவ்வளவு புத்திமானாயிருப்பினும் தன்னால் செய்யப்பட்ட நல் வினை, தீவினை என்ற இவ்விரண்டின் பலத்தைத் அவசியம் அனுபவித்தே தீரவேண்டும். இக்கருத்தே

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ।

என்று கூறப்பட்டிருக்கிறது. ஹே தயவில்லாதவனே, சான்றோரால் இனி இவ்விதக் கொடிய பாபங்களை நீ செய்யாதிருப்பதுடன் முன் செய்யப்பட்ட கர்மாக்களுடைய கெட்ட பலத்தை நீ அடையாதிருக்கும் வண்ணம் உனக்குரிய நல்ல கர்மாக்களை மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்து வந்தாலன்றி இவ்வுலகிலும் பரலோகத்திலும் சுகமென்பது அற்பமேனும் உனக்கு கிட்டாமற் போகுமென்பது திண்ணம். அன்றியும் அநேக வருஷங்கள் பல விதமான நரகங்களை அடைந்து அதிக துக்கத்தையும் அனுபவிப்பாய் என்றும் கூறினான்.

இவ்விதமாக ஒவ்வொரு தினமும் புலையனை நோக்கி அந்த அந்தணனால் உபதேசிக்கப்பட்ட புத்திமதிகளை அடிக்கடி செவியுற்றதினால் சில காலம் சென்றபின் அவ்வயோக்யனான புலையன் ஜன்மாந்திரத்தில் செய்த புண்ய கர்மபரிபாகத்தால் பரிபாகம் அடைந்து அவ்வேதியனை நமஸ்கரித்து மிகவும் பக்தியுடன் பிரார்த்தித்தான்—ஹே விப்ரகுலதிலகனான நண்பனே அநேக கொடிய பாபங்கள் பலதடவைகளில் என்னால் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வுலகில் எல்லோராலும் அயோக்கியனென்றும் இரக்கமற்றவனென்றும் மகா பாபி என்றும் நிந்திக்கப்பட்டவ

னாக இருக்கிறேன். நான் யாது செய்வேன்? இப்பொழுது என் மனத்தில் அதிக பயம் உண்டாயிருக்கிறது. என் பாபத்தை எப்படித் தொலைப்பேன்? யாரைச் சரணமடைவேன்? இவ்வளவு பாபியாயும் நீசனுயுமிருக்கும் என் பேரில் எவ்வளவு கருணைக்கடலாயிருந்தாலும் எவர்கள் தாம் அன்புபாராட்டிப் பாதுகாப்பார்கள்? ஹே வேதிய சிரோமணியே, உம்மைத்தவிர வேறு சரணமற்றவனுய் உமது திருவடிகளை நாடிய என்னைப் பாதுகாக்க வேண்டுமென்று பல விதமாய்ப் பிரார்த்தித்துப் பங்கத்தின் நடுவில் நின்று தவிக்கும் பசுவைப் போன்ற என்னைக் கைவிடுவது கருணாநிதியாயும் மித்ர ரத்நமாயுமிருக்கும் தங்களுக்கு உசிதமில்லாமையால் அவசியம் என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று அந்தப் பிராமணனுடைய பாதகமலங்களில் பன்முறை பணிந்து பக்தியுடன் பிரார்த்தித்து நின்றான். உடனே அந்த அந்தணனும் மனதிரங்கி இவன் பேரில் தயவுண்டாய் அப்புலையனைப் புனிதனைச் செய்து நன்னெறியில் ஸ்தாபிக்க வேண்டுமென்று அவனைக் கூவிப் போதும் போதும் நீ சொல்வது சரியே. இனி உனக்கு க்ஷேமமுண்டாகும் வழியைக் கூறுகிறேன். கவனமாய்க் கேள் என்று சொல்லத் தொடங்கினன். பூமியில் புராதானமாயும், யக்ஷர், ஸித்தர், கிந்நரர் முதலிய விண்ணவர்களாலும், ஸனகர், ஸநந்தர், முதலிய மகரிஷிகணங்களாலும், ஸேவிக்கப்பட்டதாயும், மிகவும் பரிசுத்தமாயும் விளங்கும் வியாக்ரபுரம் (சிதம்பரம்) என்று பெயர் பூண்ட ஓர் புண்ய க்ஷேத்திரத்தில் உமாபதியாயும் நீலகண்டனுயும் பிரகாசிக்கும் ஸ்ரீ பரமேசுவரர் நர்த்தனம் செய்து வருகிறார். நீ பக்தியுடன் அந்த உத்தமக்ஷேத்திரம் சென்று சாந்தமனதுடன் காலையில் ஸ்நாநம் செய்து தூரத்திலிருந்து, தப்ரஸபையை (சித்ஸபையை) நோக்கித் தண்டம்

ஸ்மர்ப்பித்து அவ்விடத்திலுள்ள யோகிகள் ஞானிகள் ஸத்கர்ம சீலர்கள் முதலிய மகான்களான பிராம்மணர்களுக்கு நீ ஸம்பாதித்த திரவ்யம் முழுமையும் ஸந்தோஷமான மனத்துடன் தானம் செய்தால் உன் பாபம் நசித்துவிடும், உன் தனமானது கெட்ட மார்க்கத்தால் அபகரிக்கப்பட்டு வந்திருக்கிறபடியால் அதில் அற்பமாகிலும் உன்னிடத்தில் பாக்கி இருக்குமாகில் உன் பாபம் ஒருக்காலும் போகாது. இவ்விதம் செய்து உன் ஆயுள் முழுமையும் அவ்விடத்திலேயே வஸிக்கவேண்டும் என்று சொன்னான்.

இவ்விதம் அந்தப் பிராமணனால் கூறப்பட்டதைக் கேட்ட அந்தப் புலையன் அவனுடன் கூட பரிசுத்தமான மனத்தையுடையவனாய்க் கொண்டு மிகுந்த சிரத்தையுடன் வியாக்கிரபுரத்தை (சிதம்பரத்தை) யடைந்தான். அங்குப் போய்ச் சேர்ந்த பின் ஒவ்வொரு தினமும் காலையில் பக்தியுடன் ஸ்நானம் செய்து தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் யாவையும் யோகிகளுக்கும், வித்வான்களுக்கும் மற்றுமுள்ள ஏழைகளுக்கும் ஒவ்வொரு தினமும் சந்தோஷத்துடன் தானம் செய்து அந்த க்ஷேத்திரத்தில்விளங்கும் கருணாமூர்த்தியான சித்ஸபேசரை ஐந்து குரோசத்திற்கப்பால் நின்றுகொண்டு தர்சித்து நமஸ்கரித்து அவரைத் தியானித்துக் கொண்டு வெகுகாலமிம்மாதிரியாகவே நியமமாய் வஸித்து வந்தான். இவ்விதம் கொஞ்சகாலம் சென்ற பின் இந்தப் புலையன் மிகவும் புண்யக்ஷேத்திரமான சிதம்பரத்தில் வஸித்து வந்தபடியால் அவ்விடத்திலேயே மரணமடைந்தான். மரணத்திற்குப் பிறகு அனேக போகங்களை யனுபவித்து உமாபதியான வியாக்ரபுரீசனுடைய பிரஸாதத்தால் நிர்விக்னமாய் உத்தமமான முக்தியை யடைந்தான். இவன் மித்திரனை அந்தப் பிராமணனும் அந்த க்ஷேத்திரத்திலேயே பிரா

தஸ்நாகம் செய்து அந்த உமாபதியான மகேசுவரனைப் பக்தியுடன் முற்கூறிய விதம் பூஜித்து வந்தான். இவனது பூஜையால் ஸந்தோஷப்பட்டு இவனுக்கும் அவஸான காலத்திலவ் வீசன் முக்தி யளித்தார். இவ்விதம் சிவலிங்க பூஜையால் கணக்கற்றவர்கள் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுதலை யடைந்திருக்கின்றனர். இந்த ஈசுவராராதனமானது இன்ன விடத்தில்தான் செய்யவேண்டுமென்கிற நியமமில்லை. புண்ய க்ஷேத்திரங்களிலும் செய்யலாம். சிலர் தங்கள் வீட்டிலேயே தங்கள் சக்திக்குத் தக்கபடி விதிப்படி ஈசனைப் பூஜித்து மோக்ஷமடைந்திருக்கிறார்கள்.

ஹே முனிவர்களே, இவ்விஷயத்தில் அதிகமாகச் சொல்வதில் என்ன பயன்? எல்லா ஜந்துக்களுக்கும் போகமும் மோக்ஷமும் இவ்வித சிவபூஜையாலேயே கிடைக்கவேண்டுமேயன்றி மற்றொன்றால் சுலபமாய் அடைய முடியாது. ஆதலால் நீங்களும் முற்கூறியபடி புக்தி முக்தி என்னும் பலத்தைக் கொடுக்கும் மஹாதேவரைப் பூஜித்துக் கிருதார்த்தர்களாக வேண்டுமென்று சொல்லிக் கதையை முடித்தார். இதைக் கேட்ட ரிஷிகள் யாவரும் ஸூதருக்கு வந்தனம் செய்து அன்று முதல் விசேஷமாய்ச் சிவாராதனம் செய்து வந்தார்கள். என்று சூதஸம்ஹிதை சிவமாஹாத்மிய கண்டத்தில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

இதினால் ஸம்ஸாரபந்தத்தை நிவர்த்தி செய்ய விரும்புவோர்களுக்கு ஈசுவராராதனமே முக்கியமென்றும் அவ்வித ஆராதனமும் அவரவர்களுக்குச் சாஸ்திரத்திற் கூறியவாறு செய்யவேண்டுமென்றும் ஆராதிக்கும் மார்க்கம் அதிகாரி பேதத்தால் பலவிதமேற்பட்டிருந்தாலும் பலத்தில் தாரதம்யமில்லை என்றும் நற்கதியையடைய இதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தெரிகின்றபடியால் அவ

ரவர்களும் சக்திக்கியன்றமட்டில் ஈசுவராராதனத்தைச் செய்து ஜன்ம ஸாபல்யத்தை யடைய வேண்டுமாய் வேண்டுகின்றோம்.

அம்பரீஷ சரித்திர ரகஸ்யம்.

(முன்தொடர்ச்சி.)

போகும்போது நடுவழியிலேயே பலை அதி பலையென்ற இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். பிறகு அநேக அஸ்திர தேவதைகளைக் காட்டிக் கொடுத்தார். ஆகவே விசுவாமித்திரர் ஸம்பந்தப்பட்ட கதையெல்லாம் மந்திர சாஸ்திரமென்பதே பெரியோர்களது கொள்கை. இப்படியே இச்சரித்திரமுமெனக் கொள்ளல் வேண்டும். இதிலும் முறையே கீழ் கூறப்பட்ட ஆக்ஷேபணை ஒவ்வொன்றையும் கவனிப்பாம். நரபசு யாகம் உண்டாவென்பது முதல் ஆக்ஷேபணை. அது உண்டென்பதே சித்தாந்தம். ஆனால் மற்ற பசுக்களைப்போல் அவனது வபையையெடுத்து ஹோமம் செய்கிற வழக்கமில்லை. மற்று அவனை யூபஸ்தம்பத்தில் கட்டி அபிமந்திரணம் செய்த பிறகு அவனை அவிழ்த்து விட்டுவிடுகிறது வழக்கம். அத்தகையோன் செத்தவன்போலவேதான். அவன் ஒருவனுக்கும் ஒரு காரியத்திற்குமுதவமாட்டான். தேசாந்தரத்திற் போய் பந்துக்கள் கண் காணாமலலைந்துக் கொண்டிருக்கவேண்டியதுதான். ஆனால் இத்தகைய யாகத்தை அம்பரீஷன் செய்

யவிரும்பினனென்றிகழ்ந்திருக்கிறது. அது தவறு. உண்மையாய் அம்பரீஷனென்பவன் மகா மந்திரஸித்திபெற்றவன். அதனால் இவன் பல தடவை பிராமணோத்தமர்களின் முன்னிலையில் மந்திரங்களின் ஸித்தியைப் பெற்றவன், எக்காரியமும் செய்யலாமென்றும் மும்மூர்த்திகளும் அவனுக்குத் தாஸர்களாவார்களென்றும் சொல்லிக் கொண்டிருந்தான். இவனுக்கு விசுவாமித்திரரிடம் மிகுந்த பக்தியுண்டு. இப்படியிருக்க இவனது யாகத்தில் தற்செயலாய்ப் பசுக் காணமற்போகவும் இவனது ரித்விக்குகள் மந்திர மகிமையைப் பரிசோதிக்க விரும்பியே ஓர் நரபசு கொண்டுவரவேண்டுமென்றார்களேயொழிய உண்மையாய் யாகத்தில் பசு காணமற் போனால் நரபசு யாகம் செய்யவேண்டியதுதான் அவசியமென்று பிராயச்சித்தம் சாஸ்திரங்களிற் கிடையவே கிடையாது. ஆனால் இதனால் மந்திரப்பிரபாவத்தை எப்படியறியலாமென்று நினைத்தார்களென்றால் இப்படிப்பட்ட கடுமையான பிராயாச்சித்தத்தைவிதிப்போம். அப்போது அதற்குத் தயங்கித் தன் விசுவாமித்திரர் மூலம் மந்திரத்தினால் ஏதாவது பரிகாரம் தேடலாம், அல்லது தானே வேறு என்ன செய்கிறான் பார்ப்போமென்பதுதான். இத்தகைய இவர்களது வார்த்தையைக் கேட்ட மகானான அம்பரீஷன் கொஞ்சமும் தயங்கவில்லை. இவர்களது மனதிலுள்ள அபிப்பிராயத்தை நன்கு அறிந்துகொண்டான். உடனே அந்த மந்திரப் பிரபாவத்தையே நன்கு காட்டுகிறேனென்று மனதில் திட்டம் செய்துகொண்டான். அதற்கு சுனஸ்சேபந்தான் சரியான ஆஸாமியென்றும் தெரிந்துகொண்டான். ஆனால் காடு, மலை, பட்டணம், கிராமங்கள்தோறுமலைந்தானென்றிருக்கிறதேயென்றால், அது வெளிக்காகமட்டிலுமே தவிர வேறல்ல. மற்றும் பிள்ளையை யாகத்திற்கென்று கேட்

டால் ஒரு நீசஜாதியோனும் கொடுக்கமாட்டானென்பதும் திண்ணமென்பது அரசனுக்கு நன்கு தெரியும். உண்மையாய் மந்திர மகிமையைக் காட்டுவதற்கென்று சொல்லப்படாவிடில் அரசன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பிறர் உயிரை வாங்கயெத்தனித்திருக்க மாட்டான். அப்படிபத்தனிப்பவனாய் இருந்தால் அத்தகையபாபி இந்த மகா பரிசுத்தமான ரகுகுலத்தில் உதித்திருக்கமாட்டானென்பதையும் திண்ணமாய் நம்புங்கள். இப்படி இவன் கண்ட விடங்களிலெல்லாம் அலைவதுபோல் அலைந்துவிட்டுப் பிரகு ரிசிகரிடம் போய்ச் சேர்ந்தான். அங்கு போய் அவரிடம் பிள்ளையைக் கேட்டான். அங்கிருக்கும் வால்மீகியினது சுலோகம் இது—

स पुत्रसहितं तात सभार्यं रघुनन्दन ।
भृगुतुङ्गे सहासीनमृचीकं संददर्शह ॥
तमुवाच महातेजाः प्रणम्याभिप्रसाद्य च ।
ब्रह्मर्षिं तपसा दीप्तं राजर्षिरमितप्रभः ॥

ரகுநந்தனா, அவன் பிருகுதுங்கத்தில் பிள்ளைகளோடும் பாரியையோடும் கூடியிருக்கிற ரிசீகரைக்கண்டான். பிறகு மகாதேஜஸ்வியும் ஏராளமான காந்தியுள்ளவனும் ராஜரிஷியுமான அம்மகாராஜன் தபஸினால் பிரகாசித்துக் கொண்டிருக்கிற பிரம்மரிஷியான அவரை நமஸ்கரித்து வேண்டி ஒரு வார்த்தை சொன்னான் என்றிருக்கிறது இந்த இரண்டு சுலோகங்களிலும் அடியிற் கீறலிட்ட ஒவ்வொருபதத்தையும் சற்று நிதானித்து கவனிப்பீர்களானால் அதனாலேயே இச்சரித்திரத்தின் ரகஸியம் நன்கு வெளிப்பட்டுவிடும். வால்மீகி மகரிஷி ஒரு பதம் அல்லது ஒரு எழுத்தையும் கூட பிரயோசனமில்லாமல் பிரயோகம் செய்யமாட்டாரென்பது ரஸிகர்களது கொள்கை. அப்படியிருக்க இக்கதையில் மேலாழ்ந்தபடி புலப்படும் அர்த்

தமே உண்மையாயிருப்பின் சுலோகத்திற் கூறவிடப்பட்ட பதங்களைப் போடமாட்டார். மற்று இவ்விதம் தன்னு யிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பிறருயிரை யாசிக்க வந்த பாபியான அரசன் கேவலம் தபஸ்விவேடம் பூண்டு பொன்னாசைகொண்டு இறக்கமின்றியிருக்கும் ஒரு பிரா மணனைக் கேட்டார் என்று பெயரைக் குறிக்காமலே சொல்லி விடுவார். அப்படியில்லாமல் ரிசீகமகரிஷிக்கு அடைமொழியாய் सभार्य, भृगुतुङ्ग, आसीनं, ब्रह्मर्षि, तपसा दीप्तं, என்றும் அரசனுக்கு महातेजाः, राजर्षिः, अमितप्रभः, என்றும் போட்டு இருவரையும் வெகுவாய்ப் புகழ்கிறார். இவை களின் அபிப்பிராயம் இது सभार्य என்றதனால் ஸ்திரீ கள் எப்போதும் பிள்ளைகளை அடித்து அதட்டக்கூட சம் மதிக்கமாட்டாளென்பது உலகப் பிரஸித்தம். அப்படி யிருக்க யாகத்திற்கு விற்பதென்றால் ஒரு சமயம் புரு ஷன் பணத்தாசையால் செய்து விட்டானேவென்று எண் ணவேண்டாம். இந்தக் காரியத்தை அன்னையும் கூட விருந்தே ஒப்புக் கொண்டாளென்பது ரகஸ்யம். அதன் காரணம் பின்பு வெளியிடுகிறேன். பிறகு भृगुतुङ्ग என்று கூறியதால் மகாவிசித்தி க்ஷேத்திரமென்றும் அல்பனுக்கும் மகாஸம்பத்தை இயற்கையாய் அளிக்குமென்பதும் பொ ருள். ब्रह्मर्षि என்றதனால் கேவலம் ஜாதிப்பிராமண்யம் மட் டிலுமல்ல, ரிஷியும் கூட என்பது கருத்து. तपसा दीप्तं என் றதால் தபஸ் செய்ய ஆரம்பித்தாலே ரிஷியென்று பெயர் பெறலாம். இவர் அப்படிப்பட்டவரல்ல. தபஸ்வினால் மிகவும் பிரகாசிக்கிறாரென்பது பொருள். இத்தகைய மகானுக்குப் பிள்ளையை விற்றுப் பசுக்கள் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று ஆசையுண்டாகுமென்று நாம் ஸ்வப்பனத்திலாவது நினைக்கலாமா? அப்படி நினைத்தால் அவனுக்கு ஏற்படும் பாபத்திற்கு அளவுண்டோவென்றும்

கவனியுங்கள். பிறகு அரசனின் உடைமொழிகளை கவனிப்பாம், महातेजाः மகா தேஜஸ் உடையவன் என்றார் राजर्षिः அரசன் மட்டிலும் அல்ல, ஜனகன்போல் ராஜரிஷி தேகாபிமானமற்றவனென்பதும் பொருள். பிறகு अमितप्रभः அடங்காத காந்தியுள்ளவன் என்றார் வால்மீகி. பாருங்கள், முதலில் மகா தேஜஸ் பெற்றவனென்றார் அது ஒன்றே போதாதா? மறுபடி அடங்காத காந்தியுள்ளவனென்றார்? இதன் கருத்து இது. மகா தேஜஸ் பெற்றவனென்றால் க்ஷத்திரிய ஜாதிக்கு ஏற்பட்ட வீரிய தைரியங்கள் பொருந்திப் பிரகாசிக்கிறவனென்றும் அடங்காத காந்தியென்றதால் தபஸ் மந்திரம் முதலிய ஸித்தியினால் வெளிக் கிளம்பி வியாபிக்கும் மகா தேஜஸ்வியென்றும் அர்த்தம். ஆகவே வால்மீகி இவ்வளவு பதங்களாற் புகழ்ந்த இம்மகாராஜனை கேவலம் தன்னுயிரைக் காப்பாற்ற விரும்பி நரயாகத்திற் பிரவர்த்தித்திருப்பான். இனி அரசன் பட்டணத்தை விட்டுப் புறப்படும்போதே சுனஸ்சேபனிடத்தில்தான் அவனுக்கு எண்ணம் என்று சொன்னேன். ஏனெனில் சுனஸ்சேபன் வெகுவாய் மந்திரஸித்தி பெற்றவன். ஆகல் பற்றியே அநேக மந்திரங்களில் शुनःशेफ ऋषिः என்றிருக்கிறதாகப் பெரியோர்களது கொள்கை. இப்படிப்பட்ட இவன் விசுவாமித்திரரிடத்திலும் சிக்ஷைபெற்றவனென்பதும் அரசனுக்கு நன்கு தெரியும். ஆகல் பற்றியே அரசன் இவனை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரரது ஆசிரமம் போனான். அங்கு போனவுடன் விசுவாமித்திரரிடம் போய் தான் பூரணமான சிஷ்யலக்ஷணமுள்ளவனென்பதை அடியில்வரும் சுலோகத்தாற் காண்பித்தான்.

पपाताङ्के मुनेराशु वाक्यं चेदमुवाच ह ।
न मेऽस्ति माता न पिता ज्ञातयो बान्धवाः कुतः ।

त्रातुमर्हति मां सौम्य धर्मेण मुनिपुंगव ॥

முனியின் மடியில் விழுந்தான். வார்த்தையை இம்மாதிரி சொல்லலுற்றான். ஓ முனி சிரேஷ்டரே எனக்குத் தாயில்லை, தந்தையில்லை, ஞாதிகளுமில்லை, பந்துக்களேது? ஸௌம்யரே, 'என்னை தர்மமாகக் காப்பாற்றும் என்றான். இதில் வெளிப்படையாய் தாயும் தந்தையும் தம்பி தமயன்களும் கருணையின்றி அரசனிடம் ஒப்புவித்தபடியால் ஒருவருமில்லையென்று சொன்னதும் பொருந்தும். ஆனால் உண்மையான அர்த்தம் இது. ஓர் சிடன் ஒரு குருவினிடம் வித்யாப்பியாஸத்திற்கோ மந்திரோபதேசத்திற்கோ வந்தால் முதலில் அவரை நமஸ்கரித்து அவரிடம் தான் மிக பாபியென்றும் எனக்கு யாதொரு 'கதியுமில்லை, என்னை நீர் காப்பாற்றும், என்று பரமபச்சாத்தாபத்தை வெளியிடுவான். அதுபோலவே இம்மகானும் வெளியிட்டான்.

स हि विद्यातस्तं जनयति । तच्छ्रेष्ठं जन्म । शरीरमेव हि मातापितरौ जनयतः ।

குருவானவர் வித்தையிலிருந்து அவனை உத்பத்தி செய்விக்கிறார். அதல்லவா சிரேஷ்டமான ஜன்மம், சரீரத்தைமட்டுமல்லவா தாய் தந்தையர்கள் உண்டு பண்ணுகிறார்கள். என்ற ஆபஸ்தம்ப ஸூத்திரத்தின்படி கேவலம் எப்பவும் அழியக்கூடிய சரீரத்தை மட்டிலும் உண்டுபண்ணிய தாய் தந்தையைத் தாய் தந்தையராக நினைத்தானில்லை.

भिक्षाप्रदा जनन्यः पितरो गुरवः कुमारकाः शिष्याः ।

என்றபடி குருவையே பிதாவாக நினைத்தான். ஆதலபற்றியே धर्मेण मुनिपुंगव என்ற பதங்களைப் பிரயோகித்தானேயொழிய मातुलं அதாவது மாமாவே என்னைக் காப்பாற்று என்றானில்லை. மற்றும் இத்தோடு நிறுத்தாமல்

पितेव पुत्रं धर्मात्मंत्रातुमर्हति किल्बिषात् ।

ஓ தர்மப் பிரபுவே தகப்பன் பிள்ளையைக் காப்பாற்றுவதுபோல் என்னைப் பாபத்தினின்றும் காப்பாற்று என்றான். இதிலும் தகப்பன் பிள்ளையைக் காப்பாற்றுவதுபோல் என்று சொன்னதால் தன் தகப்பனிடத்தில் பிரியமுள்ளவனென்றும் அவனும் பிள்ளையினிடத்திற் பிரியமுள்ளவனென்றும் ஏற்பட்டது. மற்றும் किल्बिषात् என்று சொன்னான். இந்த மகாராஜனிடமிருந்தும் காப்பாற்றுஎன்று சொன்னானில்லை. இனித் தாய்த் தந்தையர்கள் எதற்காக இவனை மகாராஜனிடம் ஒப்புவித்தார்களென்றால் லக்ஷம் பசுவுக்கு ஆசைப்பட்டு என்று சொல்லவேண்டிவருகிறது. அது சரியாவென்பதை கவனித்தால் அதுவும் ஒவ்வாது. ஏனெனில் நான் முற் கூறிய பிரகாரம் அவர்களுக்குக் கொஞ்சமேனும் பசுக்களிடத்தில் ஆசையேகிடையாது. ஒரு சமயம் அப்படி ஆசையிருந்தால் அவர்களது விருப்பத்தைத் தீர்க்க எத்தனையோ அரசர்கள் அக்காலத்திலிருந்தனரென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். மற்றும் விசுவாமித்திரர் ரிசீகருக்கு மைத்துனனென்றும் வெளியாகிறது. அவர் அரசனாய் இருந்த காலததில் இவரது பத்னி தன் தமயனான விசுவாமித்திரரிடமிருந்து எத்தனை லக்ஷம் பசுக்களை அடைந்திருக்கலாம். அவர் அப்படிப் பசுக்களில்லாதவரென்று சொல்வதற்கில்லை. வசிஷ்டருடைய காமதேனுவுக்கு பதிலாக கோடிக்கணக்காய்ப் பசுக்களைத் தருகிறேனென்று மார் தட்டினவர். ஆகவே பசுக்களின் ஆசையினால் பிள்ளையைக் கொடுத்தாரென்று சொல்லவும் முடியாது। ஆனால் ஏதாவது ஒரு பிள்ளையைக் கொடுக்காமல் நடுப் பிள்ளையைக் கொடுக்கக் காரணம் யாதெனலாம். அங்குள்ள ரகஸியம் இது. இவர் மூத்தவனை ஸீமந்த புத்திரனென்று ஆதரவுடன் வளர்த்து

விசேஷ பிரியம்வைத்து அவனைத் தபஸ் முதலிய கஷ்டங்களுக்குள்ளாக்காமல் வைத்துக்கொண்டார். ஆயினும் தபஸ் முதலிய காரியங்களிலும் மந்திர முதலியவைகளின் சக்தியையும் சாதாரணமாய் அறிந்தவன்தான். அவன் மட்டிலும் தீவிரமாய்ச் செய்ததில்லை. இது போலவே மூன்றாவது பிள்ளையினிடம் தாயார் வைத்த பிரியத்தினால் அவனும் தபோனுஷ்டானத்தில் விசேஷ சிரமம் செய்தவனில்லை. சுனஸ்சேபனோ மிக்க தபஸ்வீ, மகாமந்திர புருஷன், அநேக சித்தி பெற்றவன், அவ்விஷயத்தில் மிக்கப் பிரஸித்தி பெற்றவன். இதையறிந்த மகான் அம்பரீஷன் ரிஷியினிடம் யாசிக்கவே இவனது கோரிக்கைப்படி மந்திர சக்தி பெற்றவன் மூத்தவனில்லையென்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு வெளிப்படையாய் மூத்த பிள்ளையை நான் கொடுக்கமாட்டேனென்று சொல்லிவைத்தார். இதையறிந்த தாயார் கடைசிப் பிள்ளையைக் கொடுக்க மாட்டேனென்றாள். இவ்விருவரது குறிப்பையும் அரசனது விருப்பத்தையுமறிந்த மகான் சுனஸ்சேபன் ராஜனே, என்னைப் பற்றி ஒருவரும் விரும்பாததால் நான் தமக்கு ஒப்புவிக்கப்பட்டேன் புறப்படும் என் தகப்பனுக்குப் பசுக்களை கொடும் என்றான். இங்கும் யோசித்துப் பாருங்கள். உண்மையாய் பிள்ளையை விருப்பமின்றிக் கொடுத்திருக்கும் பக்ஷத்தில் இவன் தகப்பனருக்குப் பசுக்களைக் கொடும் என்று சொல்வானா? தாய் எவ்விதத்திலாவது சம்மதிப்பாளா? ஒருபோதும் இல்லை. இனி இவன்நிமித்தம் விசுவாமித்திரர் தனது பிள்ளைகளை சபித்தார். அநியாயமாவென்று கவனித்துப் பார்க்க வேண்டும். இதிலும் ஓர் ரகஸ்யம் வெளியாகிறது. எப்போதும் தபஸ், மந்திரம் முதலியவைகளில் பரம ஸித்தி பெற்றவர் அதர்மம் எங்கு தோன்றினும் அது யாரிடம் தோன்றினும்

அந்த இடத்தின் கௌரவத்தை கவனிக்கமாட்டார். அதர்மமேயென்ற ஒன்றை மட்டிலும் கவனித்துப் பரம தாபத்தோடும் கோபத்தோடும் சபிப்பதே வழக்கம். அதனாலேயே இவர் திரிசங்குவுக்காக யாகம் செய்யவாரம் பித்தபோது வஸிஸ்டரது பிள்ளைகள் இவரைக் கண்டபடி தூஷிக்க அது பொருக்காமல் வஸிஷ்டரதுபிள்ளையாய் இருந்தாலும் லக்ஷியம் செய்யாது சபித்தார். இவர் செய்த யாகம் அக்கிரமமாய் இருப்பினும், அது தேஜோ வான்களது திவ்யதேஜஸ்ஸினால் மறைபட்டுப்போகும். ஆதல் பற்றியே

दृष्टो धर्मव्यतिक्रमः साहसं च महताम् ।

மகான்களிடம் தர்மவித்தியாஸமும் ஸாகஸமும் காணப் படுகின்றன. அதை மற்றவர்கள் செய்யக் கூடாதென்று தர்ம சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இப்படிப்பட்ட இந்த ஸூக்ஷமத்தை அறியாமல் வஸிஷ்டரது புத்திரர்க ளென்றும் தாங்களும் தபஸ்விகளென்றுமேற்பட்ட கர் வத்தால் விசுவாமித்திரரை வைதார்கள். அது குற்ற மென்று கண்டு விசுவாமித்திரர் சபித்தார். அதை வஸிஷ் டர் மட்டிலும் நியாயமென்று எண்ணிப் பிரதி சாபம் யாதொன்றும் செய்யாது சும்மாவிருந்துவிட்டாராயினும் அபக்விகளான சில மகரிஷிகள் விசுவாமித்திரர் சபித்தது அனியாயமென்றும் பரமகோபியென்றும் நிந்தித்து வந் தார்கள். இப்படியிருக்க இச்சமயம் தனது பிள்ளைகள் சுனஸ்சேபனுக்காக ஒருவரும் ஏற்றுக்கொள்ளாதகுற்றத் திற்காக இவர்களையும் இவ்விதமே சபித்தார். தகப்பன் என்ன சொன்னாலும் அதை ஆலோசிக்காமலே கேட்க வேண்டும். ஆதல்பற்றியே ஸ்ரீராமர் காட்டுக்குப் புறப் படத் தயாராகும்போது லக்ஷ்மணன் போகவேண்டாமெ ன்றும் தகப்பன் ஸ்திரீயின் மோகத்தினாலும் கிழத்தனத்

தினும் சொல்லும் வார்த்தையை நாம் கேட்கவேண்டியது அவசியமில்லையென்றும் சொன்னபோது ராமபிரான் லக்ஷ்மணா, அப்படிச் சொல்லாதே என்று சொல்லித் தன் தாயாரைப் பார்த்து

नास्ति शक्तिः पितुर्वाक्यं समतिक्रमितुं मम ।
अहं हि वचनाद्राज्ञः पतेयमपि पावके ॥

தகப்பன் வார்த்தையை மீற எனக்கு சக்தியில்லை, நான் அரசனது வார்த்தையினால் நெருப்பிலும் குதிப்பேன் என்றும் கண்டுமகரிஷியென்பவரும், பரசுராமரும் தகப்பனது வார்தையினால் செய்யத்தகாத காரியத்தையும் செய்திருக்கிறார்கள் என்றும் பலவாறு சொல்லுகிறார். இந்த நியாயத்தைத் தனது புத்திரர்கள் மீறினது அதர்மம் என்று கொண்டு சகியாமல் தன் பிள்ளையென்று பிரியம் வைக்காமலே சபித்தார். சபிக்கும்போது வஸிஷ்டர் பிள்ளைகள்போல் என்று ஒரு வார்த்தை சொன்னார். அது எதற்காகவென்றால் கீழ் கூறப்பட்டபடி சில சாமான்ய ரிஷிகள் விசுவாமித்திரரை வைதுக் கொண்டிருப்பதைத் தானும் அறிந்து அவர்களுக்குப் புத்தி புகட்டவே இவ்விதம் சொன்னார். वासिष्ठा इव जातिषु என்று இதனால் அம்மகரிஷிகளுக்குப் புத்தி உபதேசம் செய்தாரென்றே கொள்ளவேண்டும். எவ்வித மெனில் ஆகா! விசுவாமித்திரர் வஸிஷ்டரது பிள்ளைகளைக் கோபத்தால் சபித்தாரென்று நினைத்தோமே அது தவறு. மற்று அவர் தர்மக் குறைவை சகியாதவர். ஆதல் பற்றியே சாமான்யக் குற்றத்திற்காகத்தான் பிள்ளைகளைக்கூட வஸிஷ்டர் பிள்ளைகள்போல் போங்களென்று சபித்தாரேயென்று புத்தியை அடைந்தார்கள். இவ்விதம் இச்சரிதம் தலை முதல் அடிவரை தர்மஸூக்ஷ்மமென்பதே பெரியோர்களது கொள்கை. ஆகவே தர்மஸூக்ஷ்மமுள்ளதும் மகாபுண்ய

சரித்திரமான இக்கதையில் பிள்ளையை விற்றாரென்றாவது நரயாகம் செய்ய எத்னித்தாரென்றாவது ஒருவிதக் குறையும் கூறக் கொஞ்சமும் இடமில்லையென்பதே எனது விருப்பம். இதில் இன்னும் இரகஸ்யமிருப்பின் அதை பெரியோர்கள் தயவு செய்து உடனே இப்பத்திரிகையிலேயே வெளியிடவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

M. N. ஸுப்பிரமணிய சாஸ்திரிகள்.

லோகாந்திரம் செல்லுதற்குறிய சரீர நிர்ணயம்.

சரீரேந்திரியாதிகளை விடவே, ராஜ்யத்திற்கும் அதில் வஸிக்கும் பிரஜைகளுக்கும் அதிபதியாகிய அரசன்போல் அச்சரீரேந்திரியாதிகளுக்கு அதிபதியாகி ஸர்வவிருத்திகளுக்கும் ஸாக்ஷியாக விளங்கும் ஜீவாத்துமா, பூர்வ புண்ய வசத்தால் மானிடப் பிரவியில் ஜனித்து அதனிலும் வேதாதிகாரம் பெற்ற ஆரியர்களான அந்தணர் குலத்துதித்து முறையே ஜாதகருமம் முதலிய ஸம்ஸ்காரம் பெற்று தன்னுடைய வர்ணாச்ரமத்திற் குரியவாறு விதிக்கப்பட்ட கன்மங்களைக் காமனையின்றிச் செய்தானேயாகில் சித்தசுத்தியையடைந்து கிரமமாக தத்துவ ஞானம் பெற்று அந்த ஞானத்தின் வலிமையால் அவித்தை விலகவே அதன் மூலமாய் வாய்ந்த காம கர்மாதிகள் விலகி பிராரப்தமுள்ளமட்டும் ஜீவன் முக்தியையநுப

வித்து பிராரப்தம் நசித்த பின்னர் நிர்விசேஷசைதன் னிய ரூபமான விதேககைவல்யத்தை இருந்த விடத்தி லேயே அடைகின்றானாகையால், அவனுடைய இந்திரியாதி கள் அச்சரீரத்தினின்றும் கிளம்புகின்றதில்லை. உபா ஸனையோடு ஸ்ரௌதஸ்மார்த்த கர்மங்களை செய்பவன் சரீரம்போனபின் அர்ச்சிராதி மார்க்கத்தால் ப்ரம்மலோக த்தையும், உபாஸனையின்றி கேவல கர்மங்களை மாத்திரம் செய்பவன் தூமாதிமார்க்கத்தால் ஸ்வர்க்காதி லோகங் களையும், இவ்விரண்டு ஸாதனங்களையும் அனுஷ்டிக்காமல் கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென்று நினைத்து தன்னிஷ்டம்போல் நடந்தவன் இவ்விரண்டு மார்க்கத்தா லும் செல்லாமல் மூன்றாவது மார்க்கத்தால் நரகாதிகளை யும் அடைகின்றான். அவர்களுள் பிந்திக் கூறப்பட்ட மூன்று பேர்களும் லோகாந்தரம் செல்லுங்கால் அதைப் பற்றி அனேக வாதங்களிருக்கின்றமையால் சிலருக்கு சம் சயமுண்டாகின்றது. அதையிங்கு விசாரிப்பாம்.—அவ் வாதங்கள் இவ்வாறும்—ஆன்மாவும் மனது முதலிய இந் திரியங்களும் வியாபகங்களாகையால், ஒன்றும் செல்லு கிறதில்லை. ஆனால் சரீரம் போனவுடன் கர்மபலத்தை யனுபவிக்க லோகாந்தரத்திலுண்டாகும் சரீரத்தில் நல் வினை தீவினைக்கேற்ப அறிவு முதலியவையுண்டாகின்றன. இதைத்தான் ஆத்துமா சென்றதாகச் சொல்லுகிறது. வாஸ்தவமாகவே ஆத்மா செல்லுகின்றானென்பது பொரு ந்தாது. வியாபகனாதலால் எங்கிருந்து எங்கு செல்வது? இந்திரியங்களும் வியாபகங்கள்தான் ஆகவே அதுவும் போகாது. என்று சிலர். வேறு சிலர்—ஆத்துமா மாத் திரம் செல்லுகிறான். மனது, இந்திரியங்கள், சரீரம் போல புதிதாகவே உண்டாகின்றன வென்றார்கள். மற் றுஞ் சிலர்—ஆத்மாவும் மனதும் செல்லுகின்றன. இந்தி

ரியங்கள் மாத்திரம் புதிதாக உண்டாகின்றன வென்கி றார்கள். இன்னும் சிலர்—சரீரத்தைத் தவிர வேறு ஆத்துமா இல்லாதபடியால் பரலோகஞ் செல்லுவதுயாரு மில்லை. பரலோகமுங் கிடையாது என்றார்கள். இங்ஙனம் பற்பல வாதங்கள் உள. அவைகளெல்லாம் வியவஹாரதசையில் பரலோக யாத்திரை முதலியவைகளை போதிக்கின்ற சுருதிஸ்மிருதிகளுக்கும் அதன் பொருளை விளக்கப் பிரவிர்த்தித்த 'तदन्तरप्रतिपत्ति' அதிகரணத்திற்கும் விருத்தமாயிருக்கின்றபடியால் ஆதரிக்கத்தக்கவையல்ல. ஆனல் யாங்ஙனம் பரலோக யாத்திரை கூறப்படுகிறதெனில்—கூறுவாம். ஜீவன் தனக்கு மந்திரிபோன்ற முக்கியப் பிராணனுடனும் மனதுடனும் கண் முதலிய இந்திரியங்களுடனும் வித்தியை (உபாஸனம்) கர்ம்மம், பூர்வவாஸனை இவைகளும் பின்தொடர இச்சரீரத்தை விட்டுக்கிளம்பி பரலோகஞ் செல்கின்றான். என்று

'अथैनमेते प्राणा अभिसमायन्ति'

என்ற வாக்யம் முதல்

'अन्यन्नवतरं कल्याणतरं रिपं कुरुते'

என்பதாதி வாக்கிய பரியந்தமுள்ள பிரகரணத்தால் சுருதி நன்கு நிரூபிக்கின்றது. சாந்தோக்கியம் முதலிய வுபநிடதங்களிலும் பஞ்சாக்கினிவித்தியாப்பிரகரணம் முதலிய விடங்களில் இப்பொருள் வெளிப்படுகின்றது. இங்ஙனமிருக்க சரீரத்தைத் தவிர வேறு ஆத்மாவேயில்லை யென்று வாதிப்பது சரியன்று. லோகாந்தரமில்லையென்பது பிசகு.

'अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ।'

இங்கிப்பொழுது பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் இலோகந்தானுளது. பரலோகங்கிடையாது என்று அபிமா

ணங்கொண்டு வாதம்செய்பவன் அடிக்கடி என் (யமன்) வசமடைவான். என்று நசிகேதஸ்ஸுக்கு, யமதர்ம ராஜன் கூறுவதாக கடசுருதி கூறுகின்றது. ஆகையால் நாஸ்திகவாதம் பிசகேயாம். இதன் விரிவை—"ஆன்மா" என்ற அடுத்த பிரஸங்கத்திற் கூறுவாம். புதிது புதிதாக தேகப்போலவே இந்திரியாதிகள் லோகாந்தரத்தில் உண்டாவதாக ஆஸ்திகர்களிலேகதேசிகள் வாதிப்பதும் உசிதமன்று.

'तदापीतेः संसारव्यपदेशात्'

என்ற அதிகரணத்தில் மோக்ஷமடைகின்றவரை வீதே இந்திரியம் முதலியன ஆன்மாவோடு தொடர்ந்து வருகின்றன என்றல்லவா ஸூத்திரக்காரர் ஸித்தாந்தம்செய்திருக்கின்றனர். அன்றியும் ஆன்மா சரீரத்தை விட்டுக் கிளம்புகின்றானென்பதே இந்திரியம் முதலிய உபாதிகளிற் சேர்ந்தமையாற்றான்' தன் உபாதிகளான இந்திரியாதிகள் கிளம்பினால் தான் கிளம்பினதாகவும் இந்திரியாதிகள் ஓரிடத்தில் நின்றால் தானும் நிலைபெற்று நிற்பதாகவும் ஆத்துமா நினைத்து பிராணாதிகளை சிருஷ்டித்துக்கொண்டு அவைகளுடன் சேர்ந்து உத்கிராந்தி (கிளம்புதல்) முதலிய வியவகாரங்களைச் செய்கின்றானென்று பிரச்னோபனிடதம் கூறுகின்றது. இங்ஙனமில்லாமல் சுயபாவமாகவே ஆன்மாவுக்கு உத்கிராந்தி முதலியவை கிடையாதென்பது பாஷ்யத்தில் வெளிப்படை. இந்த வைதிக சித்தாந்தம் காவ்வியங்களிற் பயின்ற ஆரியச் சிறுவர்கட்கும் உள்ளங்கைக் கனியாம். பாரத சம்புவில்—

'धर्मभूरनुजैः साकं तद्गिरा तत्पुरं ययौ ।
' कर्मचोदनया जीवः कायमन्यमिवेन्द्रियैः ॥'

தர்மபுத்திரர் திருதராஷ்டிர மஹாராஜாவின் ஏவுதற்படி தம்பிகளுடன் இந்திரப்பிரஸ்தம் சென்றதற்கு 'கர்மங்க

ளின் ஏவல்படி ஜீவாத்துமா தனது இந்திரியங்களுடன் வேறு சரீரம் செல்லுவதை திருஷ்டாந்தமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் லோகாந்தரத்தில் புதிது புதிதாய் இந்திரியாதிகள் உண்டாவதாகக் கூறும் வாதம் சரியல்ல. இந்திரியங்களையும் வியாபகமாக ஒப்புக் கொண்டு பிரவிருத்திக்கவாதமும் 'अणवश्च' என்ற அதிகரணஸித்தாந்தத்திற்கும் பிருகதாரண்யகத்தில் இந்திரியங் களுக்கு— "सर्वेऽनन्ताः" என்ற வாக்கியத்தால் வியாபகத்தன்மையுளதாகத் தோன்றின பிராந்தியைகண்டித்து இந்திரியங்களுக்கு மத்தியம பரிமாணத்தை ஸ்தாபித்த பாஷ்யகார சித்தாந்தத்திற்கும் விருத்தமாகையால் சரியல்ல. ஜீவன் வியாபகனாகிலும் உபாதி நிமித்தமாக உத்கிராந்தி சம்பவிக்கலாம். ஆகையால் சுருதிகளிற் கூறியபடி ஜீவாத்துமா முக்கியப் பிராணனுடனும் மனதுடனும், இந்திரியங்களுடனும் கிளம்பிச் செல்கின்றான் என்பதே சித்தாந்தம். இதனால் ஜீவன் ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பிராணாதிகள் ஐந்து, மனம், புத்தி, என்ற பதினேழு அவயவங்களடங்கிய ஸூக்ஷ்ம சரீரத்தோடு மரித்தபின் லோகாந்தரம் செல்லுகிறான் என்றேற்பட்டது. இங்ஙனம் செல்கின்ற ஜீவன் தன்னுடைய ஸூக்ஷ்ம சரீரமாகிய இந்திரியாதிகளுக்கு ஆதாரமாகிய பூதஸூக்ஷ்மங்களைப்பற்றிக்கொண்டு செல்கின்றானா? அல்லது பூத ஸூக்ஷ்மங்களை யாசிரயிக்காமலே செல்கின்றானா? எனச்சந்தேகம் நிகழ பூர்வபக்ஷிகள்—"பூதஸூக்ஷ்மங்களைப்பற்றிக்கொண்டு செல்லுகின்றானென்பது சரியல்ல. ஏனெனில் இதை பிரமாணங்கொண்டல்லவா நிர்ணயிக்கவேண்டும். பூதஸூக்ஷ்மங்களை யாசிரயிக்கிறான் என்பதில் பிரமாணம் சுருதியா, யுக்தியா, சுருதியென்பது கூடாது. இந்திரியாதிகளோடு செல்கிறான் என்று

'अथैनमेते प्राणा अभिसमायन्ति'

என்பதாதி சுருதி கூறுவதுபோல பூதஸூக்ஷ்மங்களை யாசிரயித்துச் செல்லுகிறான் என்ற பொருளை ஸ்பஷ்டமாய் விளக்கும் சுருதியைக் காணோம். யுக்தியென்றால் அது வும் பொருந்தாது. லோகாந்தரத்தில் வேறு தினமான சரீ ரம் வருகிறபடியால் அதற்கு உபாதானகாரணமாக பூத ஸூக்ஷ்மங்களிலிருந்து கூடப்போவதாக யுக்தி சொல்ல வேண்டும். லோகாந்திரத்தில் பூதஸூக்ஷ்மங்களில்லையென் றேற்பட்டதானால் இந்த யுக்தி பொருந்தும். பூதஸூக்ஷ் மங்களோ எங்குமுள்ளவைகள். ஆகவே இங்கிருந்து பூதஸூக்ஷ்மங்களும் செல்லுகின்றனவென்று கற்பித்தல் வீணே"—என்று கூறுகின்றார்கள்—அதுயுக்தமன்று. சாந் தோக்கியோபநிடதத்தில் பஞ்சாக்கினிவித்தியாப் பிரகர ணத்தில்—"எத்தனைவது ஆஹுதியில் அப்புக்கள் புரு ஷனெனச் சொல்லத்தகும் சரீராகாரமாகப் பரிணமிக் கின்றன" என்று பொருளை விளக்கும் ஜைவலி மகா ராஜனுடைய பிரச்ன வாக்கியத்தாலும்,—"இங்ஙன மாயன்றோ ஐந்தாவது ஆஹுதியில் அப்புக்கள் புருஷ னெனத்தகும சரீரரூபமாகின்றன" என்று பொருளை விளக்கும் அந்த, ஜைவலி மகாராஜனுடைய உத்தர வாக் கியத்தாலும் அப்புக்கள் என்ற பதத்தால் லக்ஷணையாக க்கிரகிக்கப்பட்ட பூதஸூக்ஷ்மங்கள், யாகம் முதலிய நற் கர்மம் செய்தவர்கள் மரித்த பின்னர் லோகாந்தரஞ்செல லும்பொழுது கூடவே சந்திரலோகஞ் சென்று ஆங்கு ஜலமயமான சரீரமாகின்றன. அந்த சரீரத்தால் ஸ்வர்க்க போகங்களை கர்மமுள்ளவரையனுபவித்து கர்மங்கள் க்ஷயித்தவுடன் அந்த ஜீவனுக்குக் கவலைமேலிட அந்த ஜலமயமான சரீரம் உருகிவிடவே, அந்த பூதஸூக்ஷ்மங் கள் ஆகாயத்தில் காற்றால் அங்குமிங்குமலைக்கப்பட்டு

நீருண்ட கருமேகத்தோடு கலந்து மழைத்துளியோடு பூமியில் வந்து, நெல்லு, யவை, எள்ளு முதலிய தான்னியங்களோடு கலந்து யௌவனப்பருவமுள்ள புருஷனால் புசிக்கப்பட்டு, இரஸம், இரத்தம் முதலியதாதுக்களாக மாறின அந்த தான்னியங்களின் ஏழாவது பரிணாமமான சுக்கிலதாதுவோடு சேர்ந்து ருதுகாலத்தில் சுக்கிலதாது கர்ப்பப்பையில்போகும் பொழுது அதில்பற்றி நிற்கும் பூதஸூக்ஷ்மங்களும் கர்ப்பப்பையிற்சென்று பத்துமாதகாலம் வளர்ந்து சரீரமாக பரிணமிக்கின்றனவென்பது ஸ்பஷ்டமாகின்றது. ஆகையால் சுருதி கூறவில்லையென்று பூர்வபக்ஷி கூறினது சரியல்ல. இங்ஙனம் சுருதி கூறினும் எங்கு சரீரமாரம்பிக்கவேண்டியதோ ஆங்கும் பூதஸூக்ஷ்மங்கள் உள்ளவைகளேயாதலால் இங்கிருந்து அவைகள் செல்ல வேண்டுவதில்லையேயென பூர்வபக்ஷிகள் கூறலாம். அதுவும் சரியல்ல. பூதஸூக்ஷ்மங்கள் எங்குமிருப்பினும் இந்திரியாதிகளுக்கு ஆசிரயமாக அவைகள் அவசியம் வேண்டியவைகளே. இந்திரியாதிகள் ஆசிரயமின்றி நிலைபெறாது, ஸ்வதந்திரமாய் செல்லாது. ஆசிரயமின்றியே அவைகளிருக்குமென்றால் ஜாக்கிரத்தசையில் அங்ஙனம் காணப்படவில்லையே. ஆகையால் ஆசிரயமொன்றைப் பற்றாமலிருக்கமாட்டாது, செல்லவும் மாட்டாது. ஆகவே பூதஸூக்ஷ்மங்களைப்பற்றியே இந்திரியாதிகள் செல்லுகின்றன. அந்த இந்திரியாதிகளை யுபாதியாகவுடையவனாகையால் ஜீவனும் பூதஸூக்ஷ்மங்களைப் பற்றிக்கொண்டே செல்லுகின்றான் என்பது சித்தாந்தம். இந்த விஷயம் ப்ரம்மசூத்திரம் 3-வது அத்தியாயம், முதலாவது அதிகரணத்தில் ஸ்பஷ்டமாயுள்ளது. இதில் பின்னும் பல ஆக்ஷேபணைகளுண்டு. அவைகளும் அதன் சமாதானங்களும் பாஷ்யத்திற்காண்க. இவ்வளவால் ஜீவன் லோகாந்தரஞ்

செல்லுங்கால் பூதஸூக்ஷ்மங்களைப் பற்றிக்கொண்டே செல்லுகின்றானெனக் கூறினோம். இனி ஜீவன் ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே லோகாந்தரம் செல்வதாகக் கூறப்படாதோவென்ற ஆசங்கை நிகழும். அதைச் சற்று விசாரிப்பாம்—இங்கு சிலர்—ஸ்தூலத்தைப்பற்றிக்கொண்டுச் செல்லுவதாகக் கூறுவதே உசிதம் என்பதாக நினைத்துக்கொண்டு அதனையே ஸ்தாபிக்க அனேகப் பிரமாணங்களை யுதாகரிக்கின்றனர். அது பாஷ்யத்திற்கும், பாமதீ, பிரம்மவித்தியாபரணம் முதலிய வியாக்கியானங்களுக்கும் விரோதிக்கின்றது. அதனை இங்கு காட்டுவாம். ஸ்தூல வாதிகள் கூறுவதாவது—ஆன்மாவுக்கு உபாதியான ஸூக்ஷ்ம சரீரம், மனம் இந்திரியங்கள், பிராணன் ஆகிய இவைகளின் சேர்க்கையென்றும், அவை நுட்பமாயுள்ளனவென்றும் பிரசித்தம். ஆகவே அவை ஸ்தூலமின்றி சேஷ்டியாது. யாதானுமோர் ஸ்தூலத்தைப் பற்றியே சேஷ்டிக்கவேண்டும். ஆதலால் மற்றோர் ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே ஜீவன லோகாந்தரம் செல்லுகின்றானென்று. இது பாமதீ விருத்தம்—அதாவது—'प्राणगतेश्च' 3—1—3 என்ற ஸூத்திரத்தின் வியாக்கியானத்தில்—பிராணங்களுக்கு ஜீவித்திருக்கும் சரீரத்தில் ஆசிரயத்தைப்பற்றி நிற்கும் தன்மையே காணப்பட்டுள்ளது. அதாவது ஜீவித்திருக்கும் சரீரம் கிளம்பினால் பிராணங்களும் கிளம்புகின்றன. ஆதலால் இந்த ஸ்தூல சரீரத்தினின்றும் பிராணங்கள் கிளம்ப வேண்டுமானால் யாதானுமோர் ஆசிரயம் கிளம்பினாற்றான் கிளம்பும். (அங்ஙனமாயின, ஆசிரயமொன்றைப் பற்றியே பிராணங்கள் கிளம்புமாயின் அவ்வாசிரயமான வஸ்து காணப்படவேண்டுமேயெனச் சங்கைகூடாது—ஏனெனில்) அந்தப் பிராணங்கள் ஆசிரயிக்கக்கூடியது ஸூக்ஷ்ம தேஹம்

பூதஸூக்ஷ்மமயமாயுள்ளது. ஆகையால் அது காணக் கூடியதாக ஆகாது. என்றபொருளை விள்ளக் கூடிய

'प्राणानां जीवद्देहे साश्रत्वमवगतम्। गच्छति जीवद्देहे प्राणा अपि गच्छन्तीति दृष्टम् । अतः षाट्कौशिकाद्देहादुत्क्रामन्तः कस्मिश्चिदुत्क्रामत्युत्क्रामन्ति । स चैषामनुविधेयः सूक्ष्मो देहो भूतेन्द्रियमय इति गम्यते'

என்ற வாக்கியங்கள் பாமதியில் இருக்கின்றமையால் ஸ்தூலத்தைப்பற்றிச் செல்லுகிறானென்பது

'स चैषामनुविधेयः सूक्ष्मो देहः'

என்ற வாக்கியத்தோடு விரோதிக்கின்றது. ப்ரம்மவித்தியாபரணத்தில் இதே ஸூத்திர வியாக்கியானத்தில்—

'तत्र च यावल्लोकान्तरप्राप्ति स्थूलभूतानामसंभवात् सूक्ष्मभूतरूपमेव प्राणगत्युपपादकं शरीरं कल्पनीयम्'

(ஜீவித்திருக்குந் தசையில் கண் காது முதலிய இந்திரியங்களுக்கு போக்கு வரவு முதலியவை தேஹமென்ற ஆசிரயத்தைப்பற்றியே காணப்பட்டுள்ளது.. மரணத்திற்குப்பின்னும் அவைகள் லோகாந்தரஞ் செல்லுவதாகச் சுருதியில் கூறப்படுகின்றது. ஆதலால் அப்பொழுதுமவைகள் யாதானுமோர் ஆசிரயத்தைப் பற்றிக்கொண்டுதான் போவதாகச் சொல்ல வேண்டும்) அதிலும் லோகாந்தரம் செல்லும் வரை ஸ்தூல பூதங்கள் சம்பவிக்கக்கூடாமையால் ஸூக்ஷ்ம பூதவடிவமான சரீரந்தான் இந்திரியங்கள் செல்லுதலுக்கு ஆதாரமாக இருப்பதாகக் கொள்ளவேண்டும். என்ற பொருள் ஸ்பஷ்டமாய் விளங்குவதால் ஸ்தூலத்தைப் பற்றியே போவதாகக்கூறுவது ப்ரம்மவித்தியாபரணத்திற்கும் விரோதிக்கின்றது.

(இன்னும் வரும்.)

வேங்கடராம சாஸ்திரிகள்.

ஸ்மிருதிகள்,

(முன்தொடர்ச்சி.)

இத்தகைய மகரிஷிகள் நமக்கு எழுதிவைத்திருக்கும் புத்தகம் கணக்கிலடங்காது. அவைகளில் அனாதியாய் நித்தியமாய் விளங்கும் வேதராசிகளின் கருத்தே முழுமையும் அமையப் பெற்றிருக்கும். அந்த நித்தியமான வேதத்தை சுருதி என்ற சொல்லால் வழங்குகிறோம். மகரிஷிகள் அக்கருத்தையே விளக்கி எழுதிய புத்தகத்துக்கு முக்கியமான பெயர் ஸ்மிருதி என்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டு சப்தங்களின் உண்மையான அர்த்தமே நமக்கு அவற்றின் யோக்கியதையைக் காட்டுகிறது. சுருதியென்றால் கேட்கிறதென்றும், ஸ்மிருதியென்றால் நினைவென்றும் ஏற்படுகிறது. இதன் கருத்து இது. ஆதியில் பிரபஞ்ச சிருஷ்டிக்காக அரூபியான பரமேசன் பிர்ம வடிவம் கொண்டவுடன் எப்படி உலகத்தை சிருஷ்டிக்கிறது? நான் யார்? நான் எதற்காக வந்தேன்? இங்கு ஒன்றும் தோன்றவில்லையே. எங்கும் வெளியாய் இருக்கிறதேயென்று பலவாறு தயங்கிக் கொண்டிருக்கும் போது ஆகாயத்தினின்றும் ஓர் சப்தம் கேட்டது. அது "ஓம்" என்ற அக்ஷரமென்று பிரவஹித்தம். பிறகு முறையே வேதங்களைக் கேட்டார். பிறகு தனது வாயினின்றும் சப்தராசியாய் வெளியேறியது. பிறகு அதன் அர்த்தத்தை ஆராய்ந்தார். அதன்படி பிரபஞ்சங்களை சிருஷ்டிக்கலாயினர். இவ்வபிப் பிராயத்தையே உபனிடத வாக்கியங்களும் வெளியிடுகின்றன. இதனால் வேதம் அனாதியென்றேற்பட்டது. பிறகு மகரிஷிகள் அவதார

மாகி அவ்வேதங்களின் அர்த்தத்தைத் தபோ மகிமை யால்மட்டிலுமே அறிந்துகொண்டு அதையே நினைத்து அப்படியே எழுதினார்கள். அதனாலேயே அது ஸ்மிருதி யெனப் பெயரை அடைந்தது. ஆகல்பற்றி ஸ்மிருதியென் பது வேதத்தின் அர்த்தத்தையே பின்பற்றி எளிதாய் நமக்கு அதை விளக்கிக் கொடுக்கிறதென்றேற்பட்டது. இவ்வபிப்பிராயத்தைக் காளிதாஸனும் வெளியிட்டிருக்கி றான். श्रुतेरिवार्थं स्मृति रन्वगच्छत्। சுருதியின் அர்த்தத்தை ஸ்மிருதி பின் தொடர்வதுபோல் என்று உபமானமாய்க் கொடுத்திருக்கிறான். இதனால் நமக்கு வெளியானதென் னவென்றால் சுருதியைப்போல் ஸ்மிருதியும் மிகப்பிர மாணத்திலுந்தமென்றும் அது காலத்திற்குத் தக்கபடி மாறும் இயல்புள்ளதல்லவென்றும் வேதமெப்படியோ அப்படித்தானென்றும் ஏற்பட்டது. ஆனால் வேதத்தி லுள்ள சப்தராசி நித்தியமென்றும் ஸ்மிருதியிலுள்ள சப் தராசி மகரிஷிகளாற் சொல்லப்பட்டதால் அது அனித்ய மென்றும் புருஷகர்த்ருகமென்றும் கூறப்படுகிறது. இவ் விதம் வேதார்த்தத்தையே வெளியிடுகின்ற இவ்வுத்த மோத்தமமான ஸ்மிருதிக் கிரந்தத்தை இக்காலத்திய நவீன புத்திமான்கள் இது அக்காலத்திற்கேற்பட்ட தென்று பலவிதமாய்க் குறை கூறி அதை அலக்ஷியம் செய்யத் தொடங்கிவிட்டனர். அத்தகையோரின் ஆக்ஷே ப வாக்கியங்களை இங்கு முதலிற் கூறிப் பிறகு அவை களுக்கு ஸமாதானமும் கூறுகின்றேன்.

இங்கு நவீனர்களது ஆக்ஷேபங்களாவன—

1. ஸ்மிருதிகள் புருஷகர்த்ருகமாதல்பற்றி நித்ய மல்ல.

2. ஸ்மிருதிகள் 18 என்றும் பின்னும் உபஸ்மிருதி கள் பதினெட்டென்றும் ஏற்பட்டதின் காரணத்தை

நோக்கின் அது அவ்வக்காலத்திற்குத் தக்கபடி கூறப்பட்டிருக்கிறதென்றே கொள்ளவேண்டி வருகிறது.

3. ஒரே அர்த்தத்தையே எல்லாம் கூறுகிறதென்றால் இவ்வளவு ஸ்மிருதிகள் வேண்டாம்.

कृते तु मानवा धर्मा स्त्रेतायां गौतमाः स्मृताः ।
द्वापरे शङ्खलिखितौ कलौ पाराशरस्स्मृतः ॥

கிருத யுகத்திற்கு மனுதர்ம சாஸ்திரமென்றும் திரேதா யுகத்திற்கு கௌதம ஸ்மிருதியென்றும் த்வாபார யுகத்திற்கு சங்கலிகித ஸ்மிருதியென்றும் கலியுகத்திற்கு பராசர ஸ்மிருதியென்றும் ஸ்மிருதியே கூறுதலாலும் ஸ்மிருதிகள் வெவ்வேறு அபிப்பிராயமுள்ளவையென்பது வெளியாகிறது.

5. மதனபாரிஜாதம் முதலியவை அநேக ராஜாக்களால் தூண்டப்பட்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு அக்காலத்திற்குத் தக்கபடி எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் மனு பராசரர் யாக்ஞவல்கியர் இவர்களது காலத்தை நிச்சயிக்கும்போது நிரம்பவும் முன் பின் ஏற்படுகிறது. ஒன்றிற் கூறப்பெற்றதுபோல் இன்னொன்றிலில்லை.

ஒவ்வொரு யுகத்திலும் அவ்வக்காலங்களிலும் காலத்தைப் பார்த்து ஸ்மிருதியெழுதியதால்தான் முன் யுகங்களில் விதவாவிவாகம், மாமிசபோஜனம், தமயன் புத்திரனில்லாமலிறந்துபோனால் அவன் பத்நியினிடம் தம்பி பிரவேசித்துப் புத்திரனை உண்டாக்குதல், சமுத்திர யாத்திரை, எல்லா ஜாதிகளிலும் விவாகம் செய்தல் முதலிய காரியங்கள் பிராமணனுக்கு ஏற்பட்டிருந்தது. கலியின் ஆதியில் சில மகாத்மாக்களால் லோகரக்ஷணார்த்தம் நிறுத்தப்பட்டது என்றும் ஸ்மிருதிகளில் இருக்கின்றன. இதனாலும் காலத்திற்கேற்றவாறு ஸ்மிருதிகள் மாறுகின்றனவெனலாம். மற்றும் ஸ்மிருதிகளில் ராஜன் இவ்வி

தம் பரிபாலனம் செய்யவேண்டுமென்றும் இவ்விதம் விவகாரம் செய்யவேண்டுமென்றும் இவ்விதம் இன்னார் இன்னாருக்கு தண்டனை விதிக்கவேண்டுமென்றும் கூறப்படுவதால் இவைகளையும் காலத்திற்குத் தக்கபடி மாற்றவேண்டாமா? முற்காலத்திலிருந்த வர்ணவிய்வஸ்தையால் அத்தகைய ஸ்மிருதிகள் ஒத்திருந்தன. இப்போது அவை ஏற்குமா? ஆகையால் இத்தகைய காரணங்களால் ஸ்மிருதிகள் அவசியம் மாற்றத்தக்கவையே என்று கூறுகின்றனர். இதை முறையே கவனிப்போம்.

ஆனால் இவ்வாக்ஷேபங்களுக்கு நாம் பதிலளிக்குமுன் ஓர் விஷயம் தெரியப்படுத்துகிறேன். அதாவது இவைகள் வெளித்தோற்றத்துக்கு மட்டிலும் பெரிய விஷயம்போற்றோற்றுமேயன்றி உள்ளாராயப்புகின் அங்கொன்றுமிராதென்பது உண்மை. அப்படியே இப்போது இவர்களது 1-வது ஆக்ஷேபத்தைப் பார்ப்போம். ஸ்மிருதிகள் புருஷகர்த்ருகமாதல்பற்றி அவை நித்தியமுள்ளனவல்லவென்பதே. இது சரி. யார்தான் ஸ்மிருதியை நித்தியமென்பார்கள். பின்னை அங்குள்ள விசேஷம் ஒன்று. ஸ்மிருதி என்றால் அதனுள்ளிருக்கும் அர்த்தமும் சப்தராசியும் சேர்ந்தே அப்பெயரை வகிக்கின்றது. அதில் சப்தராசிதான் புருஷகர்த்ருகம். அர்த்தம் அத்தகையதல்லவென்பது நிச்சயம். அர்த்தமோ வேதத்தின் கருத்தென்று முன்னமேயே கூறிவிட்டேன். வேதத்திலுள்ள சப்தராசியுள்பட நித்தியமென்பது நம் மேலான மதத்தின் அழகான அபிப்பிராயம். ஆகவே வேதார்த்தத்தை வெளியிடுவதற்காக ரிஷிகளாலேற்படுத்தப்பட்ட சப்தம் ஒன்றுதான் அநித்யம். அது நமக்கு ஒரு பாதகமல்ல. இவ்வபிப்பிராயம் ஒருவராலும் மறுக்க வொண்ணாது. இனி இதை ஸ்திரமாய்க் கைப்பிடித்தால் கீழ்

வரும் ஆக்ஷேபங்கள் லகுவாய் விலகி விடும். இனி 2 வதை கவனிப்பாம்.

இதில் ஸ்மிருதிகள் 18 என்றும் பின்னும் உபஸ்மிருதிகளென்றுமேற்பட்டதால் அவ்வக்காலத்திற்குத்தக்கபடி ஏற்பட்டனவென்கின்றனர். இது. ஸ்மிருதிகள் இருக்கும் குடிசையைக் கண்ணுற்கூடப் பாராதவர்களின் கூற்றெனலாம். இங்கு கூறவேண்டியது கொஞ்சம் உண்டு. ஸ்மிருதி 18 என்றும் உபஸ்மிருதிகள் ஏற்பட்டிருப்பது கொண்டும் அவ்வக்காலத்திற்குத் தக்கபடியென்று எதனுற் கைக்கொண்டீர்? அம்மகரிஷிகளின் காலவரையைக் கவனித்துச் சொல்கிறேனென்றால் அவர்கள் முன்னும் பின்னுமாய்ப் பிறந்தார்களென்பதைக் கொண்டா? முன்னும் பின்னுமாய் உயிர் துறந்ததைக் கொண்டா? ஒரு காலத்திலும் இவர்கள் சேர்ந்திருக்கவில்லையென்பதைக் கொண்டா? மற்றும்வேறு எதைக் கொண்டுதான் நீங்கள் காலத்திற்குத் தக்கபடி முன்னும் பின்னுமாய் ஏற்பட்டதென்கிறீர்கள்? இவர்களது காலம் வித்தியாஸமுள்ளதுதானென்று எந்தப் பிரமாணவாயிலாய்க் காண்பிப்பீர்கள்? ஒவ்வொரு மேதாவியும் தத்தம் புத்திக்கெட்டியவாறு கண்டபடியெல்லாம் கவிகளது காலத்தை நிச்சயிக்கின்றனரே, அக்கதிதானே இதற்கும். இனி ஆதியில் எந்த ஸ்மிருதி முதலில் மேலற்பட்டதென்று சொல்லுவீர்கள்? அதற்கும் பிரமாணமே கிடையாது. ஒவ்வொரு ஸ்மிருதிகாரர்களும் மற்ற ஸ்மிருதிகாரர்களைப் புகழ்ந்திருக்கின்றனர். இதனுல் இன்னதுதான் முதலில் லேற்பட்டதென்று சொல்லமுடியாதென்பதை வயோநிர்ணயமென்னும் கிரந்தத்தில் மகாமகோபாத்தியாய பிரமஸ்ரீ கணபதி சாஸ்திரிகளவர்கள் விஸ்தாரமாய்க் கூறியிருக்கின்றனர். உங்களது கூற்றின்படி முன் பின்னய் ஏற்பட்

ட்டுதானென்றே வைத்துக்கொள்வோம். அப்போதும், உங்களது சாதகத்திற்கு முன்வந்து நிற்காது. அது எமக்குச் சாதகமாய்ப் பிரகாசிக்கும். எவ்விதமெனின் அவை காலத்துக்குத் தக்கவாறிருக்கின்றனவென்னும் உங்களது சொல் பயன்பட இடம் தாராதென்பதைப் பின்னர் நிரூபிக்கின்றேன். ஆகவே அவ்வக்காலங்களில் ஏற்பட்ட அவ்வத்தேயங்களின் தர்மக் குறைவைக் கண்ணுற்ற நம் கருணாமூர்த்திகளான மகரிஷிகள் ஒரு தர்மத்தையே வெவ்வேறிடங்களிருந்துகொண்டு சொல்லவேண்டிய அவசியம் நேர்ந்தது கொண்டு அவ்விதம் பலபேர்கள் சொன்னார்கள் என்று சொல்லிவிடுவோம். இதனால் 3-வது ஆக்ஷேபணையும் நிலைபெறாது தத்தளிக்கும். உண்மையில் ஆதிகாரிக புருஷர்களென்பவர்கள் ஒவ்வொரு யுகாரம்பத்திலும் ஈசனால் தூண்டப்பெற்றுப் பூமியிற்றிருவவதாரம் செய்து தபோமகிமையினால் வேதங்களின் அர்த்தத்தை ஸ்மரித்து அப்படியே ஸ்மிருதிகளாய் தனித்தனியே இருந்துகொண்டே ஒரே அர்த்தமுள்ளதாய் இயற்றுகின்றனரென்பதே நமது மதக் கொள்கை. இவ்வபிப்பிராயத்தையே

‘युगान्तेऽन्तर्हितान्वेदान्सेतिहासान्महर्षयः । लेभिरे तपसा पूर्वं... ’

என்றதாலும் கூறியிருக்கின்றனர். இத்தகைய மகரிஷிகளோ லோகப் பிரவித்தர்களென்பது மட்டுமல்ல. மற்றும் வேதத்திலும் இவர்களது மகிமை கூறப்பெற்றுள்ளது. ஆகவே வேதப்பிரவித்தர்களும் நித்யமாயுள்ள ஈசனின் அம்ச ரூபிகளுமானவர்களும்தான், ஸ்மிருதிகர்த்தாக்களே தவிர மற்ற எல்லா மகரிஷிகளும் அப்பதவிக்குத் தகுதியற்றவர்கள்தானென்றுமேற்பட்டது. இனி 4-வது ஆக்ஷேபணைக்கு ஆதாரமான சுலோகத்தின் கருத்தென்னவென்றால் அதிலுள்ள விஷயம் இது. மனு தர்ம

சாஸ்திரத்திற் கூறப்பெற்றபடி பூரணமாய் அனுஷ்டிக்கத் தக்க ஆரோக்யத்தையும், ஆயுளையும், சௌகரியங்களை யும், பெற்றவர்கள் கிருதயுக மனுஷ்யர்களென்றும் இவ்வி தமே அந்தந்த யுகத்தின் சக்திக்குத் தக்கபடி கொஞ்சம் கொஞ்சம் சௌகரியம்போலிருக்கிறபடியால் அந்தந்த ஸ்மிருதியென்றும் கூறப்பட்டதே தவிர வேறல்ல. இத ஞல் அந்த மகரிஷிகளும் அந்தந்த யுகத்தில்தான் பிறந்து அதற்காகவே ஸ்மிருதிகள் செய்தனரென்று ஒருபோ தும் சொல்லமுடியாது. ஏனெனில் கலியுகத்திற்கென் றேற்பட்ட பராசர ஸ்மிருதியிலும் ஏராளமாய் மனு முத லியவர்களுடைய வாக்கியங்களும் ஆதாரமாய் எடுக்கப்பட் டிருக்கின்றன. எல்லா யுகத்திற்கும் பொதுவான தர்மம் தான் விசேஷமாய்க் கூறப்பெற்றிருக்கின்றன. ஒவ் வொருவரும் இந்த யுகத்திற்காகச் செய்கிறேனென்று சங்கற்பம் செய்யவுமில்லை. ஆகவே எதைக்கொண்டு நாம் அப்படிக் கூற முன் வரக்கூடும். ஆனல் பராசரர் கருணை யுடன் சிற்சிலவிடங்களில் கலியுகத்தில் ததிசி மகரிஷியின் சாபம்பெற்ற நாமெல்லாம் பிறக்கப் போகிறோமென்பதை தைக் கொஞ்சம் தனது மனதில் நினைத்துச் சிற்சில சௌகரியங்களைக்காட்டி இருக்கின்றனர். அது கொண்டு கலியுகத்திற்குப் பிராசரர் என்றேமே தவிர வேறல்ல. அது வும் அவர் தன் யுக்திகொண்டு சொன்னரில்லை. அதற்கும் வேதப் பிராமாணமுண்டென்பதை இங்கு எடுத்தால் விரியுமாதல்பற்றி அதை நிறுத்துவோம். ஆதல் பற்றி 4-வது கேள்வி பயன்படாதெனக் கொள்ளலாம்.

இனி 5-வது ஆக்ஷேபணையை கவனிப்பாம்.

இதில் மதன பாரிஜாதம் முதலியவை அநேக அரசர் களால் தூண்டப்பட்டுச் செய்யப்பட்டிருக்கின்றன என் கிறார்கள். இது ஆச்சரியமாய் இருக்கிறது. இவர்கள்

எத்தனை ஸ்மிருதியைப் பார்த்திருக்கிறார்களோ தெரியவில்லை. உண்மையாய் தர்மம் இன்னதென்றும், தர்மசாஸ்திரத்தின் ஸ்வரூபம் இன்னதென்றும் இவர்கள் தெரிந்து கொண்டிருந்தால் இவ்விதம் பேச்சுக்கிடமிராதென்று நினைக்கிறேன். மதன பாரிஜாதம் ஓர் அரசனது பெயரையே வைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஸ்மிருதிக் கிரந்தத்தில் அரசனுக்காகத் தனியாய்க் கூறப்பட்டிருக்கும் பிரகாணமென்று ஏதாவது இருக்கிறதா? அல்லது இதர ஸ்மிருதிகளிற் சொல்லப்படாத முரண் இருக்கிறதா? இல்லை. அப்படியிருக்க அரசன் பெயரை வைத்தது குற்றமோ? அவர்களுக்குக் கட்டுப்பட்டு எழுதினாரென்று கூறவேண்டுமாயின் அவசியம் மற்ற ஸ்மிருதிகளைக்காட்டிலும் மாறுபாடு காணப்படவேண்டும். அப்படியோ இல்லை.

இனி அந்தந்த யுகங்களுக்குத் தக்கபடியும் காலத்திற்குத் தக்கபடியும்தான் எழுதப்பட்டிருக்கிறதென்று கூறி விதவாவிவாகம் முதலியவை முற்காலத்திலிருந்தனவென்கின்றனர். இது நிலை பெறாது. மாமிச போஜனமும் தமயன்பத்தினியினிடம் பிரவேசித்தல் இவைமட்டிலும் இருந்ததாய்த் தெரிகிறதேதவிர விதவா விவாகமும் சமுத்திரயாத்திரையும் சாஸ்திரீயமாய்க் கிடையாதென்பதே துணிபு. ஆனால் அவைகள்தான் எதற்காக நிறுத்தப்பட்டதென்றால் அதன் காரணம் இது. முன் யுகத்திற்கும் இந்த யுகத்திற்குமுள்ள வித்தியாஸத்தை கவனித்தால் உங்களுக்கே தெரியும். முன் யுகத்தில் மாமிச போஜனம் எப்போதும் செய்வதென்பது வழக்கமில்லை. எவ்வொரு காரணத்தை ஒட்டித்தான் அப்போது நடந்தது. அக்காலத்தில் அவர்கள் தபோ மகிமையின் சக்தியைக் குறைத்துக்கொண்டு வருத்தத்துடன்தான் புசித்தார்கள். இதன் ரகசி

யம் இவ்விடத்திற் சொல்லத் தக்கதல்ல. அது தனி உபன்யாஸமென்று இங்கு நிறுத்துகிறேன். புத்திரனில்லாத தமயன் பத்னியிடத்தில் எவ்வித எண்ணம் கொண்டு எப்படி பிரவேசித்தார்களென்ற முறையை அவ்வக்கதைகள் இருக்கும் பாரதம் முதலியதின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒன்றும் கூடாதென்று ஆணையிட்டுத் தடுக்கப்பெற்றிருக்கும் ஒவ்வொரு காரியங்களும் கேவலம் காமத்திற்கென்று பிறந்திருக்கும் இக்காலத்தியவர்களால் பஞ்சாய்ப் பறக்கிறதே அப்படியிருக்க இச்செய்திகளும் சாஸ்திரீயமெனக் கூறிவிட்டால் கேட்கவும் வேண்டுமோ; வீணில் வளர்ப்பானேன். ஸ்மிருதிகள் என்பது இப்போதியவர்கள் சொல்வதுபோல் காலத்திற்கேற்றவாறு ஏற்பட்டதேச சரித்திரக் கதையல்ல. எல்லா ஸ்மிருதிகளும் ஒரே அபிப்பிராயமுள்ளவையே. எல்லாம் ஒரே வேதத்தையே பிரமாணமாய்க் கொண்டிருக்கின்றன. வேதங்களின் கருத்துக் காலத்துக்குத் தக்கபடி மாறக் கூடுமானால் ஸ்மிருகளும் மாறும்.

(இன்னும் வரும்.)

M. N. ஸுப்பிரமணிய சாஸ்திரிகள்.

"கர்மம்"

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ஆரியசீலர்களே, சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டுள்ள யாகம் முதலிய ஸத்கர்மாவை நன்கு அனுஷ்டித்து வந்தமையாலன்றோ நமது பெருமைபெற்ற பெரியோர்களால் நாமும் நமது நாடும் போற்றுவதற்குப் பாத்திரமாயினம். ஆதலின் இத்தகைய அரு

ண்மை வாய்ந்த நற்கருமங்களை நாமும் நடத்திவரவேண்டியது முதற்கடமையாகும். இந்த ஸத்கர்மானுஷ்டானமானது சரீரம், சித்தம் இவைகளுக்குச் சுத்திதருவதோடு ஆத்மலாபத்தையும் அளிக்குமென்பது தர்ம சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். இதன் உண்மையை எளிதில் சொல்லிவிடமுடியாது. பின், சாஸ்திரங்களால்தான் இதனுண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். எவ்வாறெனில் உலகத்திலுள்ளோர் அனைவரும், காலம் தவறாத ஸ்நாநம் முதலியவற்றால் நமக்கு உண்டாகும் நன்மை இன்னது என்று தீர்மானிக்கமுடியாதவர்கள். ஆனால் ஸ்நாநத்தால் மேலழுக்கு விலகும் என்றுமட்டும் எண்ணுவார்கள்—காலையில் ஸ்நாநம் செய்து வருவதால், பித்தம் ஸமனாகும், வெயர்வை வெளிப்படும், ஆஹாரம் ஜீர்ணமாகும், இந்திரியங்கள் நன்கு விளங்கும், இரத்தம் சுத்தமாகும், தோலைப்பற்றிய வியாதிகளும் தொலையும், இது முதலான குணங்கள் விளையும் என்றும், புருஷர்களுக்குச் சூரியோதயத்துக்கு முன் செய்யும் ஸ்நாநமே குணம் தருமென்றும், பெண்களும் பிரம்மசாரிகளும் உதயமான பிறகே ஸ்நாநம் செய்யவேண்டுமென்றும், யதிகள் சூரியனிருக்கும்போதே மூன்று தடவை ஸ்நாநம் செய்யவேண்டுமென்பதாகவுமுள்ள விசேஷத்தை அறியமாட்டார்கள். தர்ம சாஸ்திரமானது எல்லோராலும் தெரிந்து கொள்ளக் கூடாததும் விசேஷ அறிவுள்ளவர்களாலேயே தெரிந்து கொள்ளக் கூடியதுமான உண்மைகளை வெளியிடுமாம். ஆதலால் அதில் சொல்லியவைகளை நாம் அவசியம் கையாண்டு வரவேண்டும்.

இதில் ஒரு கேள்வி நிகழும்:—அஃது மிக முக்கியமானது தானே? இக்கேள்வியின் கருத்து இது. 'ஸ்நாநம் முதலியவற்றால்தான் நமது சரீரம் சுகம்பெறவேணு

மென்பதில்லையே. பித்தம் முதலிய சரீரத்திலுள்ள குற்றங்களை ஒழிப்பதற்கு சூரணம் ரஸாயணம் முதலிய ஔஷதங்களாலுமேற்படுமே. ஆதலால் கர்மம் அவசியம் அனுஷ்டித்தே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் எப்படிப் பொருந்தும்? உலகத்தில் கர்மங்கள் சுகத்திற்கே அமைந்தன என்றால் அதை வைத்தியர்களே நன்கு தெரிந்து தேசம் காலம் இவைகளுக்குத் தகுந்தபடி உபதேசிப்பர். ஆனதால் எல்லா ஜனங்களையும் ஒவ்வோர் காலங்களில் ஒவ்வோர் விதமாக இருக்கவேண்டும் என்று கட்டுப்படுத்துவதுமுசிதமோ? உலகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தேஹம் உயிர் இவைகளின் வாழ்வில் முயற்சித்து வருகிறார்களேயல்லாமல், அவ்வேலையில் ஒருவரும் சோம்பித்திரியக் காணோம். உலகினர் சுகமாக இருக்க இது ஒரு வழி என்று சொன்னால், வைத்திய சாஸ்திரத்தைப்போல் இந்த கர்மசாஸ்திரம் ஒன்று என்றே முடியும். அப்படியானாலும் வைத்திய சாஸ்திர வழி நடப்பவன் அடையும் சுகத்தைவிட கர்ம சாஸ்திர வழி நடக்கிறவன் அடைகிற சுகம் கொஞ்சமே. ஆனதால் ஒவ்வொருவனும் இந்த கர்ம சாஸ்திரத்தை விட்டு மற்ற சாஸ்திர வழியிலேயே சுகமடைவான். ஆகையால் கர்மம் செய்தே தீரவேண்டுமென்று கட்டாயமாவதில்லை.

இதற்கு மோக்ஷம் அடைதலே முக்கியமான பிரயோஜனம் என்று சாதித்தால்—

न स्नानेन च दानेन भक्तिः स्यादीश्वरेऽनघ ।
निर्व्याजं हि विवेकेन मोक्षः सिध्यति भारत ॥

(ஸ்நானத்தினாலும் தானத்தினாலும் ஈசுவரனிடம் கபடமில்லாத பக்தி ஏற்படாது. விவேகம் ஒன்றினாலேயே மோக்ஷமும் கிட்டும்) என்பதினாலும் உமது கர்மசாஸ்திரம் இருவகையிலும் பிரயோஜனமுடையதில்லை என்பதாம்.

இதற்குச் சமாதானம்—வைத்திய சாஸ்திரத்தில் வாத பித்த சிலேஷ்மங்கள் மீறி அதனாலுண்டாகும் கேடுகளைத் தடுப்பதற்காக பல வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சரீரம் ஒன்றுமட்டில் ஸித்திபெறுவது கர்மத்தால் மாத்திரமில்லை என்பது நமது கருத்து. இங்கு ஆலோசிக்கவேண்டியது ஒன்றுண்டு. உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் வைத்திய சாஸ்திரத்தை முழுதும் தெரிந்து அதன் வழி நடப்பார்கள் என்றுவது ஒவ்வொரு நாளும் சரீரத்தில் விருத்தியடைந்துவரும் பித்தம் முதலியதற்கு ரஸாயனம் முதலியதைச் சேர்த்து உபயோகப்படுத்திக் கொள்வதற்காவது முடியுமென்பதில்லை. அப்படிச் செய்து வந்தாலும் ஸ்வபாவத்தில் பொருள்களிலுள்ள சக்தியைப்போல சேர்க்கையால் ஓர் பொருளில் ஏற்படுமென்பது கிடையாது. அப்படி ஏற்படுத்தினாலும் அது முயற்சியால் ஆகவேணுமே தவிர ஸாமான்யமாய் முடியாது. ஆகிலும் அது எல்லாருக்கும் ஸுலபத்திலகப்படவும் மாட்டாது. ஜலம் தேசம் முதலியது எல்லோர்க்கும் எளிதில் அகப்படக் கூடிய பொருள்கள். ஆதலால், அவைகளைக்கொண்டு சரீரத்துக்கு ஏற்படும் குற்றங்களை யாவருமே போக்கிக் கொள்ளக் கூடும். இதை நன்கு தெரிந்த நமது கருணைக் கடலான முன்னோர் இந்த கர்ம காண்டத்தை வகுத்து அருளினர். அது மட்டோ! மருந்துகள் நாளாய் விட்டால் சக்தி குறைந்துபோம். எல்லா தேசங்களுக்கும் ஒரே மருந்து குணம் தராது. இனிக் கர்மம் மறுமைப் பயனையளிக்காது என்று சொன்னதும் பொருந்தாது. அஃது மோக்ஷமென்னும் பேரானந்தத்தை அளிக்காவிட்டாலும், பூமியிலுள்ள ஆனந்தத்தைக் காட்டிலும் அதிகமாயோ குறைவாயோ உள்ள வேறொரு லோகத்தை அடையச் செய்யும். அப்படி கர்மம் என்பது மோக்ஷத்திற்கு நேரே காரணமில்லையென்று

சொல்லும் சுருதியாரும் பரம்பரையாய் சரீரம் மனம் இவைகளின் சுத்திக்குக் காரணமாய் நிற்கும் என்கிறார்கள். ஆதலின் இது மோக்ஷத்துக்கு ஓர் அங்கம் என்பதே அவர் கருத்து. ஆகவே இம்மை மறுமை இரண்டும் ஒன்றோடு ஒன்று முரணாது ஸ்வபாவத்திலேயே எளிதில் கிடைக்கக் கூடியதான ஜலம் முதலிய பொருள்களைக் கொண்டே அடைவதற்கு, இந்த கர்ம சாஸ்திரமென்பது பெரிய வழி என்று கொள்ள வேண்டும். இங்கு நாம் சொல்லிவந்த வழிப்படி கவனிக்க 'கர்ம சாஸ்திரம்' யாவருக்கும் இன்றியமையாதது என்று நன்கு விளங்கும்.

இது விஷயத்தில் பெரியோர் அபிப்பிராயம் யாதெனில், பெரும்பாலும் கர்மம் என்பது சித்தசுத்தி ஒன்றுக்கே காரணம். அதனால் ஆத்மாவுக்கு நல்ல அறிவு உண்டாவது கொஞ்சமுமில்லை என்பதே. உலகத்தில் சரீரம் மனம் இவ்விரண்டும் சுத்திபெற விரும்புவோர்க்கு இந்த கர்ம சாஸ்திரத்தைக் கையாட வேண்டுவது அவசியந்தான். எப்போதுமே கர்மம் முக்திக்கு உதவாது எனக் கொண்டவர்களும் கர்மாவை விட்டு விடுதல் பாபம் என்றே கொண்டார்கள். ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் ஸோபான பஞ்சகம் என்ற சிறிய கிரந்தத்தில், 'वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां तेनेशस्य विधीयतामपचितिः' (வேததத்தை என்றும் ஓதவேண்டும்; அதில் கண்ட கர்மங்களைச் செய்யவேண்டும்; அதனால் ஈசனை வழிபட வேண்டும்.) என்றார். இதனால் அவருக்கு கர்மம் முக்கியமானது என்று வெளியாயிற்று. அதிலும் இது காம்மியமில்லை என்றும் கடவுள் வழிபாடுதானென்றும், நித்தியமென்றும் அவர் கருத்து. இனி முக்தன் அடைய வேண்டியது வேறு ஒன்றுமில்லாமையால் கர்மங்கள் அவனை விட்டு விலகிவிடும். கர்மங்களை மனமார விட்டு ஒழித்தல் குற்றமே தவிர குணம் தராது. இக்கர்மங்கள் முக்கியம் என்பதற்கு இன்னும் பல காரணங்களுமுண்டு.

(இன்னும் வரும்.)

பண்டிட் S. N. சர்மா.